# உலக தமிழோசை

ULAKA THAMILOSZAI

சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம்

11வது ஆண்டில்

விளம்பரம்™

VLAMBARAM™

416-282-8059

416-282-4978

நதி 11 JULY 15, 2001 பாலம் 14



- தன்னைத்தானே நம்புதல் வீரத்தின் சாயல் (பக். 6)
- கசப்பை இனிப்பாக்க விஞ்ஞான வெற்றி (பக். 2)
- ஜனநாயகத்தில் ஒரு அநாகரிகம் (பக். 10)
- வீட்டின் கீழ்ப்பகுதியில் வசிப்பது உகந்ததா? (பக். 17)
- இராட்சதர்கள் என மனித இனம் வாழ்ந்திருக்குமா? (பக். 09)
- மனிதனிற்கு நோய் உருவாக இயற்கையின் பங்கு என்ன? (பக். 5)
- வாகனத்தை Lease இல் வைத்திருப்பவர்களிற்கு (பக். 13)
- பனிகாலங்களில் விபத்தை தடுக்க ஏதாவது வழியுண்டா (பக். 4)
- எதிரிகளை அடையாளம் காண முடியும் ஆனால்.... (பக். 12)





RE/MAX Crossroads Realty Inc.

வீடு விற்க வாங்க பூரண ஆலோசனை பெற நாடவேண்டியவர்

Raja M. Mahendran, P.Eng.
Sales Representative

MEMBER OF RE/MAX HALL OF FAME

Office: (416) 491-4002
Pager (416) 589-4270

MEMBER OF RE/MAX PLATINUM CLUB



இழந்த தலைமுடியை மீண்டும் பெற வாருங்கள் சபோனாவிற்கு!

SABONA & Gift

☎: (416) 264-8787 ☎: (416) 269-8151
2602 Eglinton Ave.E.
Toronto, Ont., M1K 2K9
www.sabona.ca
www.tamilclub.com/sabona


## உலக நாடுகள் வரிசையில் யுனைற்றெட் அராப் இமிறேற்ஸ்

ம்த்திய கிழக்கு நாடுகளில் ஓமான் சவூதி அரேபியா ஆகிய நாடுகளையும், பேர்சியன் வளைகுடா கடலையும் எல்லையாக கொண்ட நாடே இதுவாகும். எண்ணெய் வளம் கொழிக்கும் செல்வந்த நாடுகளில் இதுவும் ஒன்றாகும். டுபாய் (Dubai), அபுதாபி (Abu Dhabi), அல்எய்ன், சார்ஜா (Sharjah) ஆகிய அமைப்பு நாடுகள் சேர்ந்தே (Al -Ai) இல் கூட்டு அமைப்புக்குள் உள்ளது.

மொத்த நிலப்பரப்பு: 32,400 சதுர மைல்
மக்கள் சனத்தொகை: 2.3 மில்லியன் பேர்
தலைநகரம்: அபுதாபி (Abu Dhabi)
(நாட்டின் பெரும் நிலப்பரப்பில் இருந்து அப்புறமாக ஒரு சிறு தீவாக இத் தலைநகரம் அமைந்துள்ளது)
சுதந்திரம்: டிசம்பர் 7ஆம் திகதி 1971 ஆம் ஆண்டு பிரித்தானியாவின் ஆட்சி அதிகாரத்தில் இருந்து பெற்ற சட்ட அமைப்புகள் மாற்றியமைக்கப்பட்டது.
பேசும் மொழி: அராபிக் (உத்தியோக மொழி) ஆங்கிலம் பரவலாக உபயோகிக்கப்படுகின்றது. ஹிந்தி, உருது போன்ற மொழிகளும் சில

தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

## உன்னை அறிந்தால்

ஒரு விஞ்ஞானி அப்பிள் கீழே விழுவதைக் கண்டு, இது ஏன் கீழே விழ வேண்டும் என தனக்குள ஆராய்ச்சி செய்திருக்கிறார். இதன் கண்டு பிடிப்பே பூமியின் ஈர்ப்பு விசை. சாதாரண மனிதர்கள் எல்லோரிற்கும் வெவ்வேறு காலங்களிலும் சந்தர்ப்பங்களிலும் நல்ல யோசனைகள் வரும். ஆனால் அவற்றில் சில, கணப்பொழுதில் மறைந்து போய்விடும். ஒரு சிறந்த எண்ணக்கரு வரும் போது ஒன்றில் அதனைக் குறித்துக் கொள்ளவேண்டும் அல்லது தன்னுடன் நெருங்கிய ஒருவருக்கு அதனைக கூறிவைக்க வேண்டும். ஒவ்வொரு செயலும் / பொருட்களின் உருவமும் தோன்றுவதற்கு ஒரு சிந்தனையே காரணமாகின்றது. சிந்தனையில உருவாகும் எண்ணங்கள் யாவும் உருவம பெறுவதில்லை. பலரிற்கு நல்ல சிந்தனைகள் உருவாகலாம். ஆனால் சிலரிற்கு மாத்திரம் தான அதற்கு உருவம் கொடுக்கும் திறமை காணப்படுகின்றது. எனவே சிந்தனையும், செயல்பாடும் சேர்ந்தாலே பூரணம் அடைய முடியும். நல்ல சிந்தனை கொண்டவர்கள தகுந்தவர்களுடன் சேர்ந்து நல்ல செயற்பாடுகளை உருவாக்குவதே வாழ்வின் வெற்றிக்கு ஒருவழி.

*நல்லதையே சிந்திப்போம். நல்லதையே செய்வோம். நாளை நமதே!*

-நெற்றிக்கண்ணன்

> வசந்தம் ஒரே நாளில் மலர்ந்து விடுவதில்லை. அதுபோல வாழ்வில் உவப்பும் உயர்வும் ஒரே நாளில் கிட்டிவிடாது.
>
> -அரிஸ்ரோட்டில்


Singapore Communication

FREE PAGER | $35.00

-One Year Service $99.00
-Activation $25.00
-Free Panasonic Pager
More Info Call:
416-745-2378 (Sathi)
416-490-7703 (Praba)
416-589-4636 (Hot Line)

100 Min Free
Mon-Fri 6pm-8am Free
Fri: 6pm - Mon 8am Free
400 First Incoming Min Free
C/W, C/F, Call ID Free
FREE GIFT AVAILABLE in store
HOT LINE: 416-980-4525





சிவாகம கிரியா பீடம்

☎: (416) 724-7480

திருமணம், பதிவுத்திருமணம், பூப்பு நீராட்டு விழா, புண்யாக வாசனம், வீடு குடி புகுதல், திருமணம் விஷேச தனபாக்கிய பூஜை, கடை திறப்பு, லக்சுமி பூஜை, சிரார்த்த மஹாளயாதி பிதிர் பூஜை மற்றும் ஜோதிஷம் பார்த்தல், ஜனன ஜாதகம் எழுதுதல், விவாகப் பொருத்தம் பார்த்தல், மஹாகணபதி ஹோமம், ஆயுஷ்ய ஹோமம், தாரதோஷ மாங்கல்ய தோஷ நிவர்த்தி ஹோமம் மற்றும் முத்து மணவறை, தலைஅலங்கார ஜோடனை, ஜடை நாகம், ஆண்டாள் மாலை, தலைப்பாகை, பரத நாட்டிய அலங்கார ஆபரணங்கள் மற்றும் கல்யாண மண்டபம் போன்ற உங்கள் தேவைகளுக்கு அணுகுங்கள். **சிவஸ்ரீ ச. கு. ஸ்ரீதரக்குருக்கள்** (கண்ணன் குருக்கள்) திருமணப் பதிவாளர் / நிர்வாகி சிவாகம கிரியா பீடம்

5 Greenleaf Terr., Scarborough, Ont.



துரித பணமாற்றுச் சேவை



வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு

மு. காசிப்பிள்ளை & சன்ஸ்

☎ (416) 267-8221



Insurance & Financial Services

Balan Kanapathi (Agent)



- Auto
- Home
- R.R.S.P
- Life
- Disability
- Mutual Fund
- Group Insurance
- Child Education
- Travel
- Business

London Life

Liberty Mutual

☎ 416 291-0451 EXT. 286 / 905 294 2429 / 416 452 6975
10 MILNER BUSINESS COURT, SUIT 900, SCARBOROUGH



VLAMBARAM, P.O. BOX 37527, 31 TAPSCOTT RD.
TORONTO, ONT. M1B 5P9, CANADA

TEL: (416) 282-8059
FAX: (416) 282-4978
e-mail: vlambaram@email.com



# அறிவும் ஆக்கமும் (84)

-விஜே குலத்துங்கம்

இந்த இதழில் சில புதிய ஆராய்ச்சி கண்டுபிடிப்புகள் பற்றிப் பார்ப்போம். இலங்கையில் இருந்தபோது அருந்திய யானை மார்க் சோடா என்றாலும் சரி, இங்கு எல்லோரும் விரும்பி அருந்தும் போர்ட்டெலோ என்றாலும் சரி, எல்லா சோடா வகைகளிலும் காஸ் (Gas) வாயு இருக்கும். சோடாப் போத்தலையோ, கானையோ திறந்தவுடன் இந்த gas வெளியேறத் தொடங்கும் உடனேயே சோடாவைக் குடித்தால் சுவையாக இருக்கும். ஆனால் gas வெளியேறிவிட்டால் சுவை குறைந்துவிடும். பொதுவாக கானீரொட்சைட்டுத்தான் இந்த பானங்களுடன் சேர்க்கப்படும். அதிக அமுக்கத்தில் காபனீரொட்சைட்டு பானத்தினுள் கரைந்துவிடும். எனவே போத்தல்களையும் கான்களையும் அதிக அமுக்கத்தில் அடைப்பார்கள். பின்னர் இவற்றைத் திறக்கும் போது, அமுக்கம் குறைய வாயு வெளிப்படும். இந்த வாயு அல்லது gas என்ன செய்கின்றது. ஏன் gas போய்விட்டால் சுவை குறைந்துவிடும் என கேள்வி எழலாம். நாங்கள் இந்த குளிர் பானங்களை வாயினுள் விடும்போது, அதிலிருந்து காற்றுக் குமிழ்கள் அல்லது காபனீரொட்சைட்டு நிரம்பிய காற்றுக் குமிழ்கள் வெளியறுகின்றன. இந்த காபனீரொட்சைட்டு குமிழ்கள் எங்கள் நாக்கிலுள்ள சுவையரும்புகளை தாக்கி அதை தூண்டுகின்றன. இதன் மூலம் வழமையை விட கூடுதலாக சுவையரும்புகள் சுவையை உணரும். இதனால்தான் gas இருக்கும் பானங்கள் கூடுதலான சுவையைக் கொடுக்கும்.

இந்தத் தத்துவத்தை அடிப்படையாக வைத்து இப்போது டெக்சாஸ் பல்கலைக்கழகத்தை சேர்ந்த Galen Kaufman என்னும் ஆராய்ச்சியாளர் பழங்களினுள்ளும் காபனீரொட்சைட்டு வாயுவை ஏற்றுவதன் மூலம் அதன் சுவையை கூட்டுவதற்கு ஆராய்ச்சிகளை மேற்கொண்டுள்ளார்கள். அதிகமாக 80 சதவீதம் நீரைக் கொண்டுள்ள பழங்களில் இவை குளிர்மையாக இருக்கும் போது அவற்றினுள் காபனீரொட்சைட்டு ஏற்றப்படுகின்றது. பின்னர் வாயினால் கடித்து சாப்பிடும்போது வாயின் வெப்பத்தினால் காபனீரொட்சைட்டு வாயு வெளியேறி, சுவையரும்புகளை தூண்டுவதினால், வழமையான சுவையைவிட அதிகமாக சுவை உணரப்படும். காபனீரொட்சைட்டு வாயு இலகுவாக நீரில் கரையக் கூடியதால், பழங்களினுள் கரைந்துவிடும். இந்த ஆராய்ச்சியாளர் அப்பிள், பெயர்ஸ், ஸ்ரோபெரி, பீச், நெக்டரின், வாட்டர் மெலன் போன்ற பழங்களில் இந்த பரிசோதனைகளை மேற்கொண்டு வெற்றி கண்டுள்ளார். விரைவில் வீடுகளில் வைத்து பழங்களினுள் காபனீரொட்சைட்டு எற்றக் கூடிய கருவிகளை விற்பதற்கு இருக்கின்றார்கள். இவை கிடைக்கும் போது, நாம் வீட்டில் எலுமிச்சம் பழச் சாறு, நெல்லிரசம் போன்றவையை தயாரிக்கும் போது அதில் காபனீரொட்சைட்டை ஏற்றி அருந்தும் போது சுவை அதிகரிக்கப்படும்.

இப்போது பால் மற்றும் யோக்கட் போன்ற உணவுப் பொருட்களை தயாரிக்கும் நிறுவனங்கள் இந்த தொழில்நுட்பத்தை உபயோகித்து அவர்களின் தயாரிப்புகளில் காபனீரொட்சைட்டை ஏற்றுவதற்கு முயற்சி எடுக்கின்றார்கள். ஆனால் இந்த முயற்சி வாழைப் பழங்களில் மாத்திரம் செய்ய முடியாது வாழைப்பழத்தில் வாயுவை ஏற்றினால் வாழைப்பழங்கள் வெடித்துச் சிதறிவிடும்.

வேறு ஒரு ஆராய்ச்சியில் தாவரங்களில் இருந்து பட்டுநூல் எடுக்கும் முயற்சி எடுக்கப்படுகின்றது. இதுகால வரையிலும் உடைகளை தயாரிக்க உபயோகிக்கப்படும் பட்டுநூல் பட்டுப்பூச்சியில் இருந்துதான் எடுக்கப்படுகின்றது. ஒரு வகை வண்ணாத்திப் பூச்சியின் புழுவானது, உருமாற்றம் பெற்று வண்ணாத்திப் பூச்சியாவதற்கு தன்னைச் சுற்றி ஒரு கூட்டை அமைத்துக் கொள்வதற்காக ஒரு சுரப்பி மூலம் பட்டுநூலைச் சுரந்து ஒரு கூட்டைத் தயாரிக்கின்றது. புழு முதிர்வடைந்து உருமாறினால் இந்த கூட்டை வெட்டித் திறந்து வெளியேறிவிடும். இதற்காக புழு முதிர்வடையும் முன்னரே இந்தக் கூடுகள் கொதிநீரில் அமிழ்த்தப்பட்டு இந்தப் புழுக்களை சாகடித்து இந்தக் கூட்டிலிருந்து நூல் பிரித்தெடுக்கப்படும். இந்தப் பட்டுநூல், Steel எனப்படும் மெல்லிரும்பை விட வலிமையானது. இந்த முறையில் பட்டுநூல் தயாரிக்கப்படும் முறை SERICULTURE எனப்படும். புழுக்கள் கொல்லப்படுவதால் சமயவாதிகளும் ஜீவ காருண்ய சபையினரும் இந்த முறையில் பட்டுநூல் தயாரிக்கப்படுவதை எதிர்க்கின்றார்கள். சிலந்திகள் கூட தங்களின் உடலில் இருக்கும் ஒரு சுரப்பி மூலம் சிலந்தி வலையைப் பின்னுகின்றது.



இயற்கை முறையில் பட்டுப்பூச்சி மூலம் பட்டுநூல் தயாரிக்கப்படும் முறை மிகவும் செலவு கூடிய முறையாகும். எனவே வேறு முறைகளில் பட்டுநூல் தயாரிக்க ஆராய்ச்சியாளர்கள் முயன்று வருகின்றார்கள். பட்டுப்பூச்சியும், சிலந்தியும் இந்த நூலைத் தயாரிக்க ஒரு வகை புரதத்தை சுரக்கின்றது. இந்தப் புரதத்தை சுரப்பதற்கு ஒரு gene காரணமாக உள்ளது எனக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே சிலந்தியின் gene ஐ பக்டீரியாகக்களுக்குள் புகுத்தி, பக்டீரியாக்களை வளைத்துப் பெருகச் செய்வதன் மூலம், இந்த பட்டுநூல் புரதம் உருவாக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த பட்டுநூல் புரதத்திற்குரிய அமினோ அமிலங்களான glycine உம் alanine உம் இவற்றை வளர்ப்பதற்கு கொடுக்கப்பட வேண்டும். எனவே இதுவும் செலவு கூடிய செயற்பாடாகும்.

இப்போது இந்த gene ஐ தாவரங்களுள் புகுத்தி, தாவரங்கள் பட்டுநூல் புரதங்களை தயார் செய்யும் முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. பக்டீரியக்களினால் தயாரிப்பதைவிட, தாவரங்களில் தயாரிக்கும் போது உற்பத்தி செலவு பத்தில் ஒரு பங்காக இருக்கும். ஜேர்மனியை சேர்ந்த Udo Conrad என்னும் ஆராய்ச்சியாளரும் அவரது சகாக்களும் இந்த gene களை உருளைக்கிழங்குத் தாவரத்திலும், புகையிலைத் தாவரங்களிலும் புகுத்தி வெற்றி கண்டுள்ளார்கள். உருவாக்கப்பட்ட புரதத்தில் 2% மான புரதம் பட்டு நூலுக்குரிய புரதம் ஆக இருந்தது. எனவே எதிர் காலத்தில் உயிர்க் கொலை இல்லாது குறைந்த செலவில் தாவரங்களில் இருந்து பட்டுநூல் உற்த்தி செய்யக் கூடியதாக வரும். அப்போது பட்டுச் சேலைகளின் விலையும் குறையும் என்பது பெண்களுக்கு மகிழ்ச்சியான செய்தி.


"ஆறிவும் ஆக்கமும்" பற்றிய உங்கள் கருத்துக்களை நீங்கள் எந்த வகையான வீடயங்களை இக்கட்டுரையில் எதிர்பார்க்கின்றீர்கள் என்பதை விஜே குலத்துங்கம் – 361 Highglen Ave, Markham, Ontario, L3S 3M2 என்ற முகவரிக்கு அல்லது **wijeyaku@ hotmail.com** என்ற முகவரிக்கு e-mail அனுப்பவும்.


13 வருடங்களாக தமிழர் மத்தியில் நன்மதிப்பைப் பெற்ற

**யோகாஸ்**

புதிய இடத்தில்

☎: (416) 267-0408




**குறுக்கு எழுத்துப் போட்டி இல. 120**

**இடமிருந்து - வலம்**

1. தமிழீழத்தில் இந்த வயிரவருக்கும் இப்பவும் வேள்வி நடைபெறுகிறது
5. சிறுகுளம்
6. கை (வல - இட)
7. கடவுளிடம் வைக்கும் அன்பு (வல - இட)
8. கோல்களை தட்டி ஆடும் ஒரு ஆட்டம்
9. உட்செல்
10. தமிழ் பலகாரம் (வல-இட)
11. சேர்
12. வயல்
14. எண்ணம் (வல - இட)

**மேலிருந்து - கீழ்**

1. பெரிய கருநிற எறும்பு
2. தமிழீழத்தின் ஒரு ஊர்
3. வாசனை எண்ணை
4. ஆடம்பரம்
5. அறிவு
7. முக்கனியில் ஒன்றைத் தரும் மரம்
10. மணமகள்
11. உட்கார்
13. பாதையின் கீழ் நீர்பாய அமைக்கப்படுவது (கீழ் - மேல்)
14. அம்பு (கீழ் - மேல்)

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "யோகாஸ்" இல் பாவிக்கக்கூடிய $15. $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் JULY 28, 2001க்கு முன்னர் விளம்பர விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.




**118இல் வெற்றி பெற்றோர்**

1) Praveen M., Mississauga, Ont.
2) L. Packirisamy, Willowdale, Ont.

* ஆட்டிறைச்சி வியாபாரத்தல் தமிழ் மக்களின் உள்ளங்களை வென்றவர்!
* அன்றாட சந்தையில் மரக்கறி, மீன்வகைகளை தினம் தருவித்து வாடிக்கையாளர்களின தொகையில் உயர்ந்தவர்!
* வாடிக்கையாளர்களின் நன்மை கருதி புதிய இடத்தில்

*733 kennedy Road*
*[Ken-Mark Plaza]*



**YARLCAN**

**STEAM CLEANING**

CARPET CLEANING

DUCT CLEANING







உங்கள் சகலவிதமான தேவைகளுக்கும் அழையுங்கள்

மோகன் ☎: (416) 724-9085 Cell : 721-9709

# APPLEMORE AUTOMOTIVE

Apple Apple Apple

உட்புற, வெளிப்புற திருத்த, பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing


SPECIAL



- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

Apple Apple Apple




**Tel: (416) 285-4998**

**2500 Lawrence Ave. East, Unit #11, Scarborough, ON**

Apple Apple Apple Apple Apple Apple Apple Apple

# துர்க்கை அம்மன் ரூர்ஸ்

ரொரன்ரோவிலிருந்து மொன்றியலுக்கு


மொன்றியலிருந்து ரொரன்ரோவுக்கு

அழையுங்கள்

☎416-283-3969

☎416-287-2824

மொன்றியல் ☎514-344-2591




## OODAM MAINTENANCE WORKS

Janitorial Services ("Sanitation for the Nation")



* KITCHEN RENOVATIONS
*BATHROOM REVOVATION
*TILES
*PLUMBING



>Railing > Fencing >Welding

Free Estimates

Pl. Call: Thamby - TEL./Fax: (416) **638-2796**

18 Brantley Cres. Downsview, NorthYork, M3J 1X5

தமிழர் நிர்வாகத்தில்



ஒரு


# EMBASSY

விசா கிடையாது, பாஸ்போட் வழங்கப்படமாட்டாது

**ஆனால்**

- வீட்டிற்கு தேவையான தரமான உணவுப் பொருட்கள்,(Groceries)
- இலங்கை / இந்திய இனிப்புப் படையல் (Sweets)
- இலங்கை / இந்திய உணவகம் (Restaurant)

**5 SAMOSA $1.00**



**Embassy அமைந்துள்ள இடம்: (FINCH / MIDDLEFIELD)**

**5200 FINCH AVE, SCARBOROUGH**

**☎ 416-332-8451**

# ஒன்ராரியோ மாகாணத்தில் வாகனம் செலுத்துதல்?

- சிவ பஞ்சலிங்கம்



பகுதி(55)

ஒன்ராரியோ மாகாணத்தில் வாகனம் செலுத்துதல், சாரதி அனுமதிப் பத்திரம் பெறுதல், வீதிப் பரீட்சைக்கு செல்லுதல், சட்டங்களை மீறும் போது தண்டனை ரிக்கற்றுக்கள் பெற்றால் நீதிமன்ற நிகழ்வுகளை முன் எடுத்தல் போன்ற சகல விடயங்களை கடந்த அத்தியாயங்களில் ஆய்வு செய்தோம்.

ஆனால் பனி மழை வீதிகளில் பொழிந்து வீதிகள் சறுக்கி கொண்டிருக்கும் நிலைமையில் ஏற்பட்ட, ஏற்பட்டு வரும் வீதி விபத்துக்களை தடுப்பதற்கு இப்போது புதிய தொழில்ச் சட்டங்களுடன் உருவாக்கப்பட்டுள்ள வாகனங்களின் அமைப்புகள் தொடர்பான விடயங்களை இவ் அத்தியாயத்தில் ஆய்வு செய்வோம்.

**A.B.S SYSTEM:**

பனிமழை பொழிந்து வீதி எங்கும் பனிக் கட்டிகள் நிரம்பி, வீதியின் வழுக்கும் தன்மை காரணமாக ஏராளமான வீதி விபத்துகளும், மரணங்களும் ஒவ்வொரு வருடமும் நடைபெற்று வருவது ஒன்ராரியோ மாகாணத்தில் மட்டுமல்ல எங்கும் நடைபெற்று வருவது வழமையாகும். வாகனச் சாரதிப் பயிற்சிப் பாடசாலைகளிலும், அரச லைசென்ஸ் பெற்ற பயிற்றுனர்களும் மெதுவாக பிரேக் பிடித்து அல்லது பிரேக் பெடலினை கையாளும் முறைகள் பற்றிப் பயிற்சி வழங்கினாலும், சில நேரங்களில் வீதி விபத்துகள் இவ் வழுக்கும் தன்மையினால் உருவாகுவதனை தடுத்து நிறுத்த முடிவதில்லை.

"பெற்ரோ கனடா" கம்பனியினர் "ஒக்வில்" (Oakville) நகரில் இத்தகைய வழுக்கும் தன்மையுள்ள வீதிகளில் வாகனத்தினை எப்படி செலுத்த வேண்டும் என்பதற்கு ஒரு பயிற்சித் திட்டங்களை தொலைக்காட்சியினூடாக விளம்பரம் செய்து நடாத்தி வருகின்றனர். ஒரு பெரிய வாகனங்கள் எதுவுமில்லாத, வெட்டவெளியான தார் நிலத்திற்கு போடப்பட்ட மைதானத்தில் ஏதோ ஒரு வகையான வழுக்கும் தன்மையுள்ள எண்ணெய் அல்லது கிறீஸ் போன்ற பதார்த்தத்தினை நிலத்தில் பரப்பி பரவலாக்கி விட்டு அதன் மேல் விரைவாக வாகனத்தினை ஓட்டி வந்து பிரேக் பிடிக்கும் போது பனிக் கட்டிகள் உள்ள வீதிகளில் வாகனம் வழுக்கிச் சுழல்வது போல சுழன்று அடிக்கும். அதனை நாமே கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரல் வேண்டும்.

பௌதிகவியல் பாடத்தில் குறிப்பிடப்படும் உராய்வு வீதியின் அடிப்படையில், வாகனம் எந்தப் பக்கத்திற்கு சறுக்கி சுழல்கின்றதோ அதற்கு எதிர்ப் பக்கமாக பிரேக் பெடல் மீதோ, அல்லது "அச்சிலேற்றர்" பெடல் மீதோ மிதியாது படார் படார் என திருப்பும் வளையத்தினை விரைவாக திருப்பும் போது வாகனம் எந்த வித சறுக்கலும் இல்லாமல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரலாம்.

இந்த நிறுவனத்தினால் இவ்வாறு பனி மழை காலங்களில் வாகனம் சறுக்காது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர திரும்ப திரும்ப அவ் நிறுவனத்தின் காரில் நன்கு பயிற்சி தருவார்கள். இப் பயிற்சி பெற்றவர்கள் பனி மழை காலங்களில் சற்றுப் பயமின்றி வாகனம் செலத்துவதுடன், வீதி விபத்துகளையும் ஓரளவு தவிர்த்துக் கொள்ளக் கூடிய சந்தர்ப்பம் உண்டு.

ஆனால் அண்மைக் காலங்களில் வாகன உற்பத்தியாளர்கள் இவ்வாறு வாகனம் சறுக்காமல் இருப்பதற்கு ஒரு புதிய தொழில் நுட்ப உத்திகளை கையாண்டு வாகனங்களை உற்பத்தி செய்துள்ளனர். அத் தொழில்நுட்ப பிரயோகத்தினை A. B. S எனக் குறிப்பிடப்படுவதுண்டு.

A nti - lock
B raking
S ystem

1980 ஆம் ஆண்டுகளின் நடுப்பகுதியில் கனடாவில் விற்பனை செய்யப்படும் வகனங்களுக்கு இவ் "A.B.S" எனப்படும் தொழில்நுட்ப முறைகள் பொருத்தப்பட்டது. இத் தொழில்நுட்பம் சில வாகனங்களின் பின் சக்கரங்களுக்கு மட்டும், ஏனைய வாகனங்களுக்கு நான்கு சக்கரங்களுக்கும் பொருத்தப்பட்டுள்ளது. இத் தொழில்நுட்பம் வாகனங்களின் சக்கரங்களை சறுக்காமல் பாதுகாக்கின்றது.

பனி மழை காலங்களில் திடீர் என "பிரேக்" பெடலை கால் பாதத்தினால் ஏதோ ஒரு அவசர திகில் காரணமாக அமர்த்தும் போது சக்கரங்கள் அசையாமல் வழுக்கிக் கொண்டு போகாத ஒரு வகையான நிலைமையினை இப் பிரேக் அமைப்புகள் உருவாக்குகின்றன.


Since the "ABS" will not allow the tire to stop rotating, you can brake and steer at the same time. The braking and steering ability of the vehicle is limited by the amount of traction the tire can generate.

எனவே புதிய அண்மைக்கால உற்பத்தி வாகனங்களை வாங்குபவர்கள் இத்தகைய A.B.Sஎன்னும் சறுக்கி, வழுக்கும் ஆபத்தினை தவிர்க்கும் தொழில்நுட்பம் இணைக்கப்பட்ட வாகனங்களாக பார்த்து வாங்கும் போது ஏராளமான வீதி விபத்துக்களை இலகுவாக தவிர்க்க முடியும்.

தொடரும்......

மேலதிக தொடர்புகளிற்கு: சிவ பஞ்சலிங்கம் - (416) 321-0999
(Professional Licensed Instructor In Car & Class Room)

கனேடிய தமிழர் வர்த்தக சம்மேளத்தினரின்
விருது பெற்ற
VIVEKA PRINTERS



உங்கள் அச்சுவேலைகள் எதுவாக இருந்தாலும் முதலில் நீங்கள் நாடவேண்டிய இடம்
80 BARBADOS BLVD., UNIT #4
SCARCOROUGH, ONT.
☎ (416) 410-6401

<u>அகிம்சா மூர்த்தியின் அருள் மொழிகள்</u>

--> உண்மையோடும், உள்ளத் துய்மையோடும் விரும்பும் செயல்கள் நிறைவேறாமற் போகா.
--> உண்மையை கடவுள் என்று கருதித் தொழுகின்றேன். உண்மைக்காக எதையும் தியாகம் செய்யச் சித்தமாக இருக்கிறேன்.
--> உலகத்தில் அறமே வெல்லும், மறம் தோற்கும்.
--> அன்பே உயர்நிலை. அன்பில்லாத உடல், தோல் போர்த்த எலும்பே.
--> உயிர்களிடம் நாம் காட்டும் அன்பே, கடவுளை நாம் அடையும் நெறி.

ஞானம்ஸ் ஸ்ருடியோ



Introducing 1 Hour Photo Lab: 3x5 & 8x12
Professional Photographer - கதிர்
☎ : 416-750-8118
*2381 EGLINTON AVE.E.*
*KENNEDY / EGLINTON, SCARBOROUGH*

# பழந்தமிழர் கலாச்சாரமும் அக்குபங்ஷர் வைத்தியமும்

பகுதி:- 16

-*Dr. N. S. Moorthy Ph.D*

## நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்

பழந் தமிழக வாழ்க்கை முறையிலே இயற்கை இரண்டறப் பின்னிப் பிணைந்திருந்தது. எது செய்வதானாலும் காலநிலை, கோள்களின் நிலை, சூழ்நிலை, நேரம் இவைகளை அவதானித்தே அவர்கள் செயற்பட்டார்கள். இதனால் அவர்கள் பல வெற்றிகளையும் முன்னேற்றங்களையும் பெற முடியும் என உணர்ந்திருந்தார்கள். குழந்தை பிறக்கும் நேரத்தை மட்டுமல்லாமல் அது கருவாய் உருவாகம் நேரத்தையும் அவர்கள் கணக்கிலெடுத்தார்கள். இந் நேரத்தைக் கணிப்பதன் மூலம் எதிர் காலத்தில் அக்குழந்தை எதிர் நோக்கப் போகும் மனோரீதியானதும் உடல்ரீதியானதுமான நோய் நிலைகளைத் தவிர்ப்பதுடன் சுக தேகியாகவும், நல்ல மனோ நிலையுடனும் வாழக் கூடிய சந்ததியை உருவாக்காலம் என அறிந்திருந்தார்கள். மனிதன் முதல் அண்டவெளி வரை சகல பொருட்களும், பஞ்ச பூதங்களாகிய [illegible]ம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகியவற்றின் மாறுபட்ட சேர்க்கையினால் உருவாகிவையே என்பதை அறிந்திருந்த பழந்தமிழர்கள் அண்டத்திலிருப்பதே பிண்டத்திலுமிருக்கும் எனக் கூறி வந்தார்கள். ஒரு மனிதனது சுக நிலையையும், நோய் நிலையையும் உருவாக்குவதில இயற்கை முக்கிய பங்கை வகிக்கிறது.

சூழ்நிலைகளில் ஏற்படும் மாற்றங்கள் மனிதனை பல வழிகளிலும் பாதிக்கின்றது. இப்போது பலரையும் கவ்விப் பிடித்துள்ள ஒவ்வாமை எனப்படும் அலர்ஜி (Allergy) நிலை. சூழ் நிலை மாறுபடுவதாலும் செயற்கைப் பொருட்களின் பாவனை அதிகரிப்பதாலும் பலவித நோய்களைத் தோற்றுவிப்பதை இன்று நாம் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. ஆஸ்த்மா எனப்படும் மூச்சுக் கஷ்டம் (Asthma), எக்ஸிமா எனப்படும் சரும நோய் (Eczema) போன்றவை முன்னர் எப்போதையும்விட இப்போது அதி வேகத்தில் அதிகரித்து வருவது இதற்கு உதாரணமாகும். அதுமட்டுமின்றி காரணம் புரியாத நோய்கள் கணக்கிலடங்காமல் நம்மைத் தாக்கி வருவதம் நாம் இயற்கையை உதாசீனம் செய்து செயற்கை வாழ்க்கை முறையை மேற்கொள்ளுவதுடன் உணவு விடயங்களில் கூட உயிரோட்டமுள்ளவைகளைத் தவிர்த்து இலகுவாக கடைகளில் அழகாகப் பதப்படுத்தி, டப்பாக்களில் அடைக்கப்பட்ட உணவு வகைகளை அதிகம் பாவித்து வருவதும் ஒரு முக்கிய காரணமாகும்.

வானியல் சாத்திரத்தில் முழு உலகுக்குமே வழிகாட்டிய நம்மவர்கள் சோதிடக்கலை மூலம் கிரகங்களது நிலைகளை நன்கறிந்து காலநிலைகளைக் கணித்து, நோய்நிலைகளிலிருந்து தப்பக் கூடிய வழிகளை நன்கறிந்திருந்தார்கள். 12 இராசிகளையும் பொறுத்தவரை அவை ஒவ்வொன்றும் மனிதனது ஒவ்வோர் உறுப்புக்களுடனும் தொடர்புள்ளவைகளாகவும், அவற்றின் நிலைகளில் ஏற்படும் [illegible]றங்கள் மனிதனது உடல் உள நிலைகளில் பாரிய மாற்றங்களையும் நோய் நிலைகளையும் ஏற்படுத்த வல்லன என்பதை அவர்கள் தெளிவாக விளக்கியுள்ளார்கள்.

ஆனால் இக்காலத்தில் மேலைத்தேய நாடுகளில் பிரபலமான சோதிடர்கள் இவற்றை அறிந்து அதை உலக மக்களுக்குத் தெரிவித்து வருகின்றார்கள். ஆனால் இவ்வரிய சாத்திரத்திற்கு உரிமையுடையவர்களான நாம் திருமணப் பொருத்தம் பார்ப்பதிலும் குழந்தை பிறந்தவுடனும் மட்டும் கடமைக்காக சோதிடர்களை அணுகி எமது தேவைகளை முடித்துக் கொள்ளும் துர்ப்பாக்கிய நிலை இப்போது ஏற்பட்டுள்ளது. இயற்கை மனிதனுக்கு பல வளங்களையும் அவற்றை அனுபவிக்கக் கூடிய அறிவையும் ஆற்றலையும் வழங்கியுள்ளது. அதைவிட மேலாக நம் முன்னோர்கள் தமது நீண்ட கால அனுபவங்கள் வாயிலாகவும் சித்தர்க்ள எனப்படும் மகான்கள் மூலமாகவும் அறிந்து கொண்ட எத்தனையோ வகையான அறிவியல் உண்மைகளை சாதாரண மனதனும் அறிந்து உணர்ந்து வாழ்க்கைக்குப் பயன்படுத்திப் பயன் பெற இலகுவான முறைகளில் கூறிச் சென்றுள்ளார்கள். அவற்றுள் சோதிடம், மருத்துவம், இசை, சிற்பம் போன்றவை இன்றும் குற்றுயிரும், குலை உயிருமாக நம் மக்களிடையே ஊசலாடிக் கொண்டு இருக்கின்றன. இவற்றை அழிவிலிருந்து காப்பாற்றுவதும் நம் ஒவ்வொருவரது கடமையாகும்.

தொடரும்....


Neelam SILK

உயர் தரப் பட்டுப் புடவைகளிற்கு நீலம் சில்க்

முகூர்த்தப் புடவைக்கு இராசியான இடம்

2001ஆம் ஆண்டின் புதுப்பட்டுத் தெரிவுகள் அனைத்தும் இப்பொழுது "நீலம் சில்க்" இல் கிடைக்கின்றன.

- JAPAN CRYSTAL SILK
- SONALIKA PURE SILK
- JARDHOSHI SATIN & CREPE SILK
- JAIPUR CRYSTAL SILK
- VASUNTHARA NETWORK CREPE

'தமிழர் மத்தியில் தரமான பட்டுப் புடவை மாளிகை'

"நீலம் சில்க்"

☎ :(416) 778-7455
FAX: (416) 778-8484
1453 GERRAD STREET
EAST (INDIAN BAZZAR)

* * *

புதிய கிளை
Tel: 416-759-2002
2378 EGLINTON AV.E
(Kennedy Rd. & Eglinton Ave. Scar.)





தமிழர்கள் மத்தியில் பலவருட அனுபவம் மிக்கவர்களால் ஆரம்பிக்கப்பட்டுள்ள புதியதோர் வெதுப்பகம்

BREAD MASTER BAKERY

பிறட் மாஸ்ரர் பேக்கரி

மொத்த ஓடர்களுக்கு விசேட கழிவு வழங்கப்படும்

றோஸ் பாண் கிடைக்கும்

பாண், பனிஸ், றோல்ஸ் அனைத்தும் சுடச்சுட எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

வாரத்தில் 7 நாட்களும்

3 for 0.99¢

31 TAPSCOTT ROAD, UNIT #B3
LOWER LEVEL, MALVERN TOWN CENTRE - SCARBOROUGH
TEL: (416) 299-5083





கலைமகள் புத்தக நிலையம்

- [illegible]றுவர்களிற்கான நீதிக்கதைகள்
- தமிழ்ப் புத்தகங்கள்
- கனடிய தமிழ்ப் பத்திரிகைகள்
- இலங்கை/இந்திய பத்திரிகைகள்
- குறுங்கதைகள், சரித்திரப் புத்தகங்கள்
- CREDIT LEVEL தமிழ் பாடப்புத்தகங்கள்
- கனடிய தமிழ்ப் பிரசுரங்கள் மற்றும் பலப் பல

துரித பணமாற்றுச் சேவை

594 PARLIAMENT ST.
TORONTO, ONT.
☎: (416) 921-5018

3238 Eglinton Ave., East
Scarborough, Ont.
☎: (416) 265-3605

3850 FINCH AVE. E.
GO 1A
SCARBOROUGH, ONT.
☎: (416) 292-9319


2580 Sheppard Ave. #9
Newin Centre Mall
Mississauga, Ont.
☎: (905) 306-0494



ELECTRICAL REPAIRS

உங்களிடமுள்ள சகல விதமான ரெலிவிசன்கள் றேடியோக்களை குறைந்த செலவிலும், சிறந்த முறையிலும் குறிப்பிட்ட நேரத்திலும் திருத்திக் கொள்ள நாடுங்கள்.

முருகதாஸ் - ☎ 416-261-6883

# விளையாட்டுத் தகவல்கள் (80)

-எஸ். கணேஷ்




## அடி மேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்!!!

## ரெனிஸ் விம்பிள்டன் - WIMBLEDON - 2001

ரெனிஸ் ரசிகர்கள் அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த விம்பிள்டன் 2001 போட்டிகள் சிறப்பே நடந்து முடிந்துள்ளன. Grand Slam Title இல்களில் Aus. Open, French Open, US Open, Wimbledon இவற்றில் புல்தரையில் Grass Court இல் விளையாடும் Grand Slam ஒரே ஒரு போட்டி Wimbledon ஆகும். புல் தரையில் விளையாடுவதால் மற்றைய ஆடுகளங்களிலும் பார்க்க பந்து நகரும் வேகம் புல் தரைகளில் அதி கூடிய வேகமாகும். ஆகவே பந்து வேகமாக நகருவதால் விம்பிள்டன் ஆட்டம் எப்பவும் விறுவிறுப்பாக நடைபெறுவதுண்டு.

ஆண்களுக்குரிய இறுதியாட்டத்தில் 29 வயதுடைய குரேசிய நாட்டைச் சேர்ந்த (Croatia) Goran Invanisevie க்கும் அவுஸ்திரேலிய நாட்டைச் சேர்ந்த 28 வயதுடைய Patrick Rafter உம் மோதிக் கொண்டனர். "அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்" என்பது முதுமொழி. Ivanisevic உலகத்திலேயே இரண்டாவது வீரர் (Unseeded Player) Wimbledon கிண்ணத்தை பெற்றவர் ஆகின்றார்.

Goran Invanisevic




விம்பிள்டன் முதல் இவருடைய தரம் 125 ஆகும். அத்துடன் Wild-Card Invitaion அழைப்புப் பெற்றே இந்த சுற்றுப்போட்டிகளில் கலந்து கொண்டார். 18 மாதங்களாக இப் போட்டிக்கு தன்னை தயார்படுத்திக் கொண்டார். அத்துடன் இது 14 தரம் Wimbledon கிண்ணத்தை பெறுவதற்கு முயற்சி செய்தும் இவருக்கு பலன் கிட்டவில்லை. 1992 இல் Agassi இடமும் 1994, 1998 Sampras இடமும் விம்பிள்டன் இறுதியாட்டத்தில் தோல்வி அடைந்தார். ஆனாலும் இவர் மனம் தளரவில்லை. 18 மாதங்களாக பெரிய போட்டிகளில் கையில் ஏற்பட்ட நோ காரணமாக கலந்து கொள்ளாத படியால் 125 வது தரத்திற்கு தள்ளப்பட்டார். ஆனாலும் இவ் வருடம் 14 வது தடவையாக மீண்டும் மீண்டும் கலந்து கொண்டு இறுதியாக 2001 Wimbeldon கிண்ணத்தை பெற்றுள்ளார்.

குரேசிய நாட்டைச் சேர்ந்த Ivanisevic மூன்று தடவைகள் விம்பிள்டன் இறுதியாட்டத்தில் தோற்றாலும் இவரது தன்நம்பிக்கையும் விடாமுயற்சியும் இவரை விம்பிள்டன் சம்பியன் ஆக்கியுள்ளது. 116 mph வேகத்தில் இவர் தன்னுடைய Serve களை வீசித் தள்ளினார். 1992 ஆம் ஆண்டு விம்பிள்டன் Record யை 213 Aces வீசி இவ் வருடம் ஒரு புதிய Record ஐ ஏற்படுத்தியுள்ளார். இந்த இறுதியாட்டத்தில் 5வது Set ஆட்டம் 1877 ஆண்டிற்கு பின்பு நடைபெற்ற அதி கூடிய நேரம் எடுத்த ஆட்டமாகும். மொத்த ஆட்டமும் 3மணித்தியாலங்கள் 7 நிமிடத்தில் நடைபெற்றது. இரண்டு தடவைகள் Grand Slam Titles ஐ பெற்ற Patrick Rafter ஐ 6-3, 3-6, 6-3, 2-6, 9-7 என்று 5 Set வரை விளையாடி Wimbeldon Champion ஆகியுள்ளார். 1985 ஆம் ஆண்டு Boris Becker இதே மாதிரி Unseeded Player ஆக விம்பிள்டனில் கலந்து கொண்டு விம்பிள்டன் இறுதிப் போட்டயில் முதன் முதலில் Champion ஆனார். அதன் பிறகு Ivansevic இரண்டாவது வீரர் ஆன Wild - Card Player ஆகவும் வந்து விம்பிள்டனை பெற்ற முதலாவது வீரர் ஆகும். இவ் விம்பிள்டன் போட்டியில் (Major Upset) மிகப் பெரிய அதிர்ச்சி என வர்ணிக்கப்படுவது 7 தடவைகள் விம்பிள்டன் கிண்ணத்தை வென்ற Pete Sampras 4வது சுற்றில் தோல்வியை தழுவிக் கொண்டமை ஆகும். அத்துடன் பெண்கள் பகுதியில் Martina Hingis முதல் சுற்று ஆட்டங்களிலே தோல்வியை தழுவிக் கொண்டமை இரசிகர்களுக்கு பெரும் அதிர்ச்சியை கொடுத்துள்ளது.

## WIMBLEDON - 2001 - பெண்கள்

அமெரிக்காவின் Venus Williams விம்பிள்டனில் தொடர்ந்து இரண்டாவது தடவையாக Belgiam நாட்டைச் சேர்ந்த Jusine Henin ஐ 6-1, 3-6, 6-0 என வெற்றி கொண்டு 2001 Wimbledon Champion ஆகியுள்ளார். 21 வயதுடைய 6அடி 1அங்குலம் உயரம் உடைய Venus இப்போது உலகத்தில் பெண்கள் வரிசையில் இரண்டாவது இடத்தில் உள்ளார். பெல்ஜியம் நாட்டைச் சேர்ந்த 19 வயதிடைய 5 அடி 5 அங்குல உயரமுடைய Henin உலகத்தில் பெண்கள் வரிசையில் 5 வது இடத்தில் உள்ளார்.

Venus Williams




July 2000 இல் இருந்து Venus Williams 3 Major Titles களையும் 2 Olmpic Gold Medal களையும் பெற்று உள்ளார். இவ் வருடம் அவுஸ்திரேலிய Open இல் Martina Hingis இடம் 6-1, 6-1 என்று கால் இறுதியாட்டத்தில் தோல்வி கண்டார். அடுத்து முதல் ஆட்டத்திலேயே Babara Sche இடம் French Open இல் தோல்வி கண்டார். ஆனாலும் இவர் மனம் தளரவில்லை. மீண்டும் இரண்டாவது தடவையாக விம்பிள்டனை வென்று உள்ளார். 1957, 58 Gibson தொடர்ந்து இரண்டு தடவைகளும் 1995 - 96 Steffi Graf தொடர்ந்து இரண்டு தடவைகள் விம்பிள்டனை பெற்றவர்கள் பட்டியலில் இப்போது மூன்றெழுத்து வீரர் ஆக Venus 2000 - 2001 என வென்று சேர்ந்துள்ளார். விம்பிள்டனில் அரை இறுதியாட்டத்தில் Lindsay Daven Port ஐ வென்று இறுதியாட்டத்திற்கு தோற்றினார். விம்பிள்டன் ஆட்டங்களில் இவர் கடந்த இரு வருடமும் 14 ஆட்டங்களில் இது வரை ஒன்றிலும் தோல்வியை காணவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

விம்பிள்டனை பெற்றதன் மூலம் Venus Williams $647,500 US டொலர்களும் Henin $323,750 Us டொலர்களும் சம்பாதிக்கு கொண்டனர். இவ் வருடம் Venus முதலாவது இடத்தில் உள்ள Hingis ஐ எட்டிப் பிடிப்பாரா என்று பொறுத்திருந்து பார்ப்போம்.

கடந்த 35 வருடமாக விம்பிள்டன் போட்டியில் Champion ஆக வந்தவர்களை இங்கு பார்ப்போம்.

**Wimbledon Champions**

| YEAR | MEN | WOMEN |
|---|---|---|
| 2001 | Goran Ivanisevic | Venus Williams |
| 2000 | Pete Sampras | Venus Williams |
| 1999 | Pete Sampras | Lindsay Davenport |
| 1998 | Pete Sampras | Jana Novotna |
| 1997 | Pete Sampras | Martina Hingis |
| 1996 | Richard Krajicek | Steffi Graf |
| 1995 | Pete Sampras | Steffi Graf |
| 1994 | Pete Sampras | Conchita Martinez |
| 1993 | Pete Sampras | Steffi Graf |
| 1992 | Andre Agassi | Steffi Graf |
| 1991 | Michael Stich | Steffi Graf |
| 1990 | Stefan Edberg | Martina Navratilova |
| 1989 | Boris Becker | Steffi Graf |
| 1988 | Stefan Edberg | Steffi Graf |
| 1987 | Pat Cash | Martina Navratilova |
| 1986 | Boris Becker | Martina Navratilova |
| 1985 | Boris Becker | Martina Navratilova |
| 1984 | John McEnroe | Martina Navratilova |
| 1983 | John McEnroe | Martina Navratilova |
| 1982 | Jimmy Connors | Martina Navratilova |
| 1981 | John McEnroe | Chris Evert Lloyd |
| 1980 | Bjorn Borg | Evonne Goolagong Caw |
| 1979 | Bjorn Borg | Martina Navratilova |
| 1978 | Bjorn Borg | Martina Navratilova |
| 1977 | Bjorn Borg | Virginia Wade |
| 1976 | Bjorn Borg | Chris Evert |
| 1975 | Arthur Ashe | Billie Jean King |
| 1974 | Jimmy Connors | Chris Evert |
| 1973 | Jan Kodes | Billie Jean King |
| 1972 | Stan Smith | Billie Jean King |
| 1971 | John Newcombe | Evonne Goolagong |
| 1970 | John Newcombe | Margaret Smith Court |
| 1969 | Rod Laver | Ann Haydon Jones |
| 1968 | Rod Laver | Billie Jean King |
| 1967 | John Newcombe | Billie Jean King |
| 1966 | Manuel Santana | Billie Jean King |
| 1965 | Roy Emerson | Margaret Smith |
| 1964 | Roy Emerson | Maria Bueno |
| 1963 | Chuck McKinley | Margaret Smith |

**GB TRANSPORT**



உங்கள் வீட்டு, வணிக, அலுவலகம் சம்பந்தமான சகல பொருட்களை பாதுகாப்பாகவும், துரிதமாகவும் இடமாற்றம் செய்வதற்கு அழையுங்கள்.

HOME - 416 335 1910
CELL - 416 459 9268

**VIMAC HOME RENOVATIONS**

SPECIALIZING IN INSTALLATION OF
* KITCHEN CABINETS
* COUNTER TOPS
* SPACE MAKING CABINETS
* BATHROOM /LAUNDRY UNITS

& GENERAL HOME RENOVATION

FREE ESTIMATE

CONTACT : VIC AT BUSINESS: 416 266 6566
416 266 7227

REPLACE YOUR COUNTER TOPS & SINK AT REASONABLE RATES

# அன்றிலிருந்து இன்றுவரை சினிமா

## 1931 ஆம் ஆண்டு தொடக்கம் வெளியான படங்கள்

–தொகுப்பு - பரம்

***1985ஆம் ஆண்டு வெளிவந்த படங்கள்***

இவ்வாண்டில் ரஜனிகாந்த் நடித்து வெளிவந்த படங்கள் படிக்காதவன், உன்கண்ணில் நீர்வழிந்தால், நான்சிவப்பு மனிதனல்ல, ராகவேந்தர்.



உன்கண்ணில் நீர்வழிந்தால் படத்தை இயக்கியவர் பாலுமகேந்திரா. சிறந்த கதையமைப்பு, சிறந்த நடிப்பு, சிறந்த இயக்கம் இருந்தும் ஏனோ இப்படம் பெருவெற்றியை அடையவில்லை. இதேஆண்டில் சந்திரசேகர் இயக்கத்தில் வெளிவந்த நான்சிவப்பு மனிதனல்ல பெருவெற்றியைத் தழுவியுள்ளது. அம்பிகா கதாநாயகியாக நடித்த இப்படத்தில் சத்தியராஜ் வில்லனாக நடித்திருந்தார். அது மட்டுமல்ல இப்படத்தில் பாக்கியராஜ் மிகமுக்கியமான பாத்திரத்தில் நடித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.


ராகவேந்திரர் பெருமையை விளக்கும் படமான ராகவேந்திரா ரஜனிக்கு 100 ஆவது படமாக அமைந்திருந்தது. இப்படம் பெரும் வெற்றி பெறாவிட்டாலும் ரஜனி ஆத்ம திருப்திக்காக அவரின் இஷ்டதெய்வம் ராகவேந்திரர் பெருமையை விளக்கும் இப்படத்தை S. P. முத்துராமன் அவர்கள் இயக்கியிருந்தார். S.P. முத்துராமன் ரஜனியின் பல வெற்றிப்படங்களை இயக்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# வேலவன் பிலிம்ஸ் ஆதரவில் சினிமாப் போட்டி

இப்போட்டியில் வெற்றிபெறும் முதல் மூவருக்கு 'வேலவன் பிலிம்ஸ்' ஸ்தாபனத்தாரினால் திரைப்படத்திற்கான நுழைவுச்சீட்டு (Ticket) வழங்கப்படும்.

**சினிமா போட்டி # 10**

1. 1985ஆம் ஆண்டு கமலஹாசன் நடித்து வெளிவந்த படங்களில் இரட்டைவேடம் ஏற்று நடித்த படம் எது?
2. 'ஸ்ரார்' படத்தின் இசையமைப்பாளர் யார்?
3. ரஜினிகாந்தின் 100வது படத்தின் பெயர் என்ன?



***சினிமாப் போட்டி #9இன் விடைகள்***

1. எஸ். ஏ. ராஜ்குமார்
2. கற்பூரதீபம், சிவகுமார், அம்பிகா, சுஜாதா
3. சிகாமணி, ரமாமணி

**போட்டி #9இல் வெற்றி பெற்றவர்கள்**

1) கோமதி, மிசிசாகா

விடைகளை August 15. 2001 இற்கு முன்பாக 'உலக தமிழோசை' இன் முகவரிக்கு அல்லது தொலைநகல்- Fax: (416) 282-4978 இற்கு அனுப்பலாம்.

## நட்சத்திரங்களின் முதல் படம்


+ சத்தியராஜ்--சட்டம் என்கையில்
+ பாக்கியராஜ்--16 வயதினிலே, புதியவார்ப்புகள்(கதாநாயகன்)
+ கார்த்திக்--அலைகள் ஓய்வதில்லை
+ பிரபு--சங்கிலி(100-வது படம் ராஜகுமாரன்)
+ ராம்கி--சின்னப்பூவே மெல்லப் பேசு
+ பார்த்திபன்--தாவணிக்கனவுகள்
+ அர்ஜுன்--நன்றி


**சங்கீதம், நடனம், வீணை வகுப்புக்கள்**


கர்நாடக சங்கீதம், பரத நாட்டியம், வீணை ஆகியவை அனுபவம் வாய்ந்த ஆசிரியையினால் கற்பிக்கப்படுகின்றது. மேலதிக தொடர்புகளுக்கு அழையுங்கள்

Mrs. கெங்காதரன் 416-759-5933

**Kennedy & Eglinton**



**யோகா சோதிடம்**



★ கிரகப் பொருத்தம் பார்த்தல்
★ சுபமுகூர்த்தம் கணித்தல்
★ சாதகக்குறிப்புக் கணித்தல்
★ பலன் பார்த்தல்

☎: (416) 299-8361


**GLOBAL**
EDUCATIONAL TRUST PLAN

**R.E.S.P.** - அரசாங்க அங்கீகாரம் பெற்ற சேமிப்புத் திட்டம்

நீங்கள் முதலிடும் தொகைக்கு அரசின் 20% மானியத்தைப் பெற்றுக்கொள்ளலாம். உலகின் எப்பாகத்திலும் கல்வி கற்பதற்கு உங்கள் சேமிப்பைப் பயன்படுத்தலாம்.

மேலதிக விபரங்களுக்கு: **V. Sathiyaraj**

**Tel: 416 291-5853** **Cell: 416 826 - 5853**



## சிலசிறப்புச் செய்திகள் #73

எழுபத்தி மூன்று என்ற எண்ணோடு பல விஷயங்கள் தொடர்புள்ளதாக உள்ளன. இனி வரும் செய்திகள் அனைத்தும் 73ஐப் பற்றி மட்டும் விளக்கப் போகின்றன.

* நியூயார்க் நகரில் உள்ள புகழ்பெற்ற எம்பயர் ஸ்டேட் பில்டிங்கில் மட்டும் 73 லிப்டுகள் உள்ளன.

* சர்வதேச நீச்சல் போட்டியில் பலவிதமான 'டைவ்' முறைகள் உள்ளன என்பது தெரியும், இந்த டைவ்களின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு தெரியுமா? 73

* நிலவில் இறங்கிய முதல் மனிதனான நீல் ஆம்ஸ்ட்ராங் 73 மாநிலங்களின் வாழ்த்துச் செய்திகள் பொறிக்கப்பட்ட தட்டு ஒன்றைத்தான் நிலவில் விட்டுவிட்டுத் திரும்பினார்.

* மேஜர் எட்வர்ட் மான்னோத் என்ற இங்கிலாந்து பைலட் 1916ம் ஆண்டு முதல் 1918ம் ஆண்டு வரை 73 ஜெர்மானிய விமானங்களைச் சுட்டு வீழ்த்தினார், ஒரு தனி நபர் சுட்டு வீழ்த்திய அதிக பட்ச எண்ணிக்கை இது தான்.

* கடல் தண்ணீரிலிருந்து இதுவரை 73 இரசாயன மூலகங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

* டின்டாஜெல் என்ற இடத்தில் உள்ள அரசர் ஆர்தர்ஸ் ஹாலில் 73 ஜன்னல்கள் உள்ளன. 1933இல் திறக்கப்பட்ட இந்த ஹாலின் 73 ஜன்னல்களிலும் ஒரே மாதிரியான ஓவியங்களே வரையப்பட்டுள்ளன.

* பாரிஸில் உள்ள ஈபிள் கோபுரத்தையும், நியூயார்க் எம்பயர் ஸ்டேட் பில்டிங் கட்டடத்தையும் அருகருகே நிறுத்தினால் ஓர் ஒற்றுமை உண்டாகும். எம்பயர் கட்டடத்தின் 73ஆவது தளம் ஈபிள் கோபுரத்தின் உயரமான கடைசி பிளாட்பாரத்தின் உயரத்திற்குச் சமமாக இருக்கும்.

* ஹம்மிங் பேர்ட் என்னும் பாடும் பறவை அடிக்கடி பாடுகிறது. எப்படித் தெரியுமா? பாடுகிறது. எப்படித் தெரிதுமா? ஒரீ விநாடிக்கு (நிமிடத்திற்கு அல்ல!) 73 தடவை சிறகுகளை அசைத்தே தான் ஒலியை எழுப்புகிறது.

* விண்வெளியைச் சுற்றிவர முதல் சோதனைக் கூடமான 'ஸ்கைலாப்' என்ற சோதனைக் கூடத்தை கடந்த 1973ம் ஆண்டு தான் அமெரிக்கா முதன் முதலாக அனுப்பியது.

* உலக அளவில் மக்கள் தொகையில் 73ஆவது இடத்தை பர்க்கினோ.'.பாஸோ என்ற நாடு பெற்றுள்ளது. இந்த நாட்டின் மக்கள் தொகை 84இலட்சம்.

* ஐஸ்லாந்து நாட்டில் ஆண்களின் சாரசரி வயது 73.

* குவைத் நாட்டில் பெண்களின் வயது 73.

* பெரு நாட்டின் படித்தவர்களின் எண்ணிக்கை 100க்கு 73 ஆகும்.


*100 கிராம் பொன்னாங்கண்ணிக் கீரையில் கிடைக்கும் சக்தி 73 கலோரிகளாகும்.


SUBA

DJ SERVICES

வண்ணக் கோலம்

திருமணம், பூப்புனித நீராட்டுவிழா, அரகேற்றம் மற்றும் அனைத்து சமய வைபவங்களுக்கும் அழகிய முறையில் கோலம் செய்து தரப்படும்.



☎ (416) 284 - 6121



Safety Truck

Training School Ltd.

Training & Trucking Classes A, D & Z

கனடாவில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தமிழ் TRUCK DRIVING பயிற்சி இடம் (7ஆம் ஆண்டு) வாரத்தில் எழு நாட்களும் பயிற்சிகள் வழங்கப்படும்.

We accept Welfare & Unemployment Insurance




தமிழ் மொழி மூலம் அனைத்துப் பயிற்சிகளும் தனித்தனியாகக் கொடுக்கப்படும். (One on One Training) அனுமதிப்பத்திரத்திற்கு (License) உத்தரவாதம் அளிக்கப்படும். வேலை எடுப்பதற்கும் உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கப்படும்.

In Classes

- 365 (Learning Permit)
- Lock Books
- Air Brake (Z)
- Dangerous Goods
- Border Crossing
- Defensive Driving Course

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்

YOGAN SOCKALINGAM


Truck Driving போதனாசிரியர்

14 Years Canadian Experience with Trucks)

Tel: (905) 793-9546 / (416) 616-5979

250 Summerlea Road, Brampton, ON


### Honda Lease இல் உள்ளவர்கட்கு



இந்த இதழில் Honda வாகனங்களை Lease இல் வைத்திருப்பவர்களுக்குத் தரலாம் என நினைத்து இக் கட்டுரையை வரைகிறேன். இங்கு Honda Lease ஐ மட்டும் எடுத்துக் கொண்டதற்கான காரணம் எனது Honda வாகனங்களின் விற்பனையானது 4 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவத்தினையும் அறிவையும் கொண்டதாகும். ஒவ்வொரு வாகனத் தயாரிப்பாளர்களினதும் Lease வித்தியாசமானது. Lease இலும் பல வகையான Lease இருப்பதைப் பற்றி ஏற்கனவே இங்கு விபரமாக எழுதியிருந்தேன். “உலக தமிழோசை” வாசகர்களுக்கு ஞாபகம் இருக்கும் என நம்புகிறேன். Lease என்று சொல்லி Daily Rental ஐயே மாதாந்தமாக மாற்றி எம் இனத்தவர்கள் பலபேர் பலமுறை ஏமாந்து உள்ளதை அறிவேன்.

Honda Lease இல் வாகனம் எடுப்பது என்பது பாதுகாப்பான விடயமாகும். வாகனத்தை Lease இல் எடுப்பதனால் உங்கள் மாதாந்தக் கட்டுப் பணத்தை குறைவாக வைத்திருக்க முடிகிறது. இதன் மூலம் நீங்கள் விரும்பிய எந்த விலையுள்ள வாகனத்தையும் உங்களால் குறைந்த மாதாந்தக் கட்டுப் பணத்தில் உரிமையாக்க முடிகிறது. அத்துடன் தொடர்ந்து புதிய வாகனம் ஓட முனைபவர்களுக்கும் வழி வகுக்கின்றது. எப்போதும் உத்தரவாதத்துடன் (warranty) இருக்கிறது. வரிப்பணத்தையும் விட இன்னும் பல விடயங்களை (எழுத முடியாதது) உள்ளடக்கி இருக்கிறது. இன்றுடன் இதை விடுத்து எடுத்துக் கொண்ட விடயத்தை நோக்கிச் செல்வோம்.

Honda Lease இல் உள்ளவர்கள் (நான் செய்த, செய்கின்ற) எந்த வேளையிலும் வாகனத்தை மாற்ற விரும்பின் எந்த மேலதிக கட்டணங்களும் இன்றி மாற்றமுடியும். 2 வருடங்களுக்கு பிறகு (4 வருட Lease இல் எடுத்தவர்கள்) Lease ஐ விட்டு வெளியேற முடியும். Lease இல் உள்ள போது வாங்கி சொந்தம் (Own) ஆக்கமுடியும். Lease இல் உள்ள வாகனத்தை Honda இடத்திற்கு மட்டுமே பராமரித்தலுக்கு கொண்டு செல்ல வேண்டும் என்ற வரை முறை கிடையாது. அடுத்ததாக நீங்கள் இப்போது Lease இல் உள்ள வாகனத்தை A எனும் இடத்தில் எடுத்து இருந்தால் Lease முடியும் போது நீங்கள் இடம் Aக்கு செல்லத்தான் வேண்டும் என்பதில்லை. நீங்கள் விரும்பிய இடத்திற்கு செல்லக் கூடியதாக இருக்கும்.

மேலதிக விபரங்களுக்கு சோதீஸ் (416) 704 - 1179

## அந்நியர்கள்

தருபவர்:- கனி



பூமியில் இன்று காணப்படும் பல பழைய பிரமாண்டமான சின்னங்களுக்கு காரணர்கள் “இராட்சதர்” கள் எனும் ஏலியன்கள் ஆகும் என்பது சில ஆய்வாளர்களின் எண்ணம். ஏறக்குறைய மனிதர்களது உடல் அமைப்பைக் கொண்ட ஆனால் உருவத்தில் மிகவும் பெரியவர்களாகிய இந்த இராட்சதர்கள் பூமியின் பல பகுதிகளிலும் வாழ்ந்திருக்க வேண்டும் என்பது அல்லது இன்னமும் தெளிவாகக் கூறவேண்டுமாயின் வெளியில் இருந்து பூமிக்கு வந்து பல இடங்களில் இறங்கி இருக்க வேண்டும் என்ற எண்ணம் ஏலியன்கள் (Alien) பற்றி ஆய்வு செய்பவர்களிடம் உள்ளது. அப்படி ஆயின் இவர்கள் எங்கிருந்து வந்திருக்கக் கூடும்? இன்று அவர்களுக்கு என்ன நடந்தது? எப்படி அழிந்தொழிந்தார்கள்? அந்நியர்கள் எனில் ஏன் இப்பொழுது வருவதில்லை? இது போன்ற பல [illegible]ள்விகள் வருகின்றன. இக் கேள்விகளுக்கு ஊகங்களின் [illegible]படையில் ஆய்வாளர்கள் தரும் பதில் எமக்கு வியப்பைத் தருகின்றன.

இராட்சதர்கள் அதிகமாக பூமியில் வாழ்ந்திருக்க வேண்டும் என ஆய்வாளர்கள் ஐயுறுவதால், அவர்கள் பூமிக்கு மிக அண்மையில் இருந்து தான் வந்திருக்க வேண்டும் என்பது அவர்களது கூற்று. இதன் படி அவர்களது பார்வை சுமார் ஐயாயிரம் வருடங்களுக்கு முன் சிறப்படன் வாழ்ந்த சுமேரியர்களது பக்கம் சென்றது. யூபிரதீஸ், ரைகிரிஸ் நதிப் பகுதிகளை ஒட்டிய மொசப்பத்தேமியா பகுதிகளில் அன்று சிறப்புடன் வாழ்ந்த இரண்டு இனங்கள் பாபிலோனியர், சுமேரியர். இவ்விரண்டு இனங்களும் அப் பகுதியை அடுத்து வாழ்ந்த ஏனையவர்களால் முற்றாக அழிக்கப்பட்டுவிட்டனர் என்பது மிக வருத்தத்திற்குரிய விசயம். ஆயினும் இவர்களது அடையாளச் சின்னங்கள் பல இன்றும் உள்ளன. அதில் சுமேரியர்கள் விண்வெளி பற்றிய எண்ணங்களை படங்களாக கற்களில் செதுக்கியுள்ளனர். அதில் பல ஆச்சரியப்படத்தக்க விடயங்கள் உள்ளன. அதில் ஒன்று நமது சூரியத் தொகுதியின் படம் ஆகும்.

5000 வருடங்களின் முன்னர் அவர்கள் வரைந்த படத்தின்படி சூரியனை மையமாகக் கொண்டு 10 கோள்கள் இருக்கின்றன. முதல் ஒன்பது கோள்களும் பருமனில் ஏறக்குறைய இன்று நாம் கூறும் சூரியத் தொகுதியின் ஒன்பது கோள்களையும் ஒத்து உள்ளது. மூன்றாவது கோள் சற்று வித்தியாசமாக வரையப்பட்டு இருப்பதால் அது எமது பூமயிாக இருக்க வேண்டும் எனக் கூறுகிறார்கள். 10வது கோள் மிகப் பெரியதாக சற்று விலத்திக் காணப்படுகிறது. (இவை எல்லாச் சூரியனை வலம் வரும் ஒழுங்கிலோ அல்லது ஒழுக்கிலோ இல்லை.) இந்தப் பத்தாவது கோள் சூரியனில் இருந்து மிகத் தொலைவில் உள்ள சூரியனின் கோள் ஆக இருக்கலாம், அல்லது சூரியனின் இறந்த சோடி ந[illegible]த்திரமாக இருக்கலாம் எனக் கூறுகிறார்கள். இந்த இன்று [illegible]டுபிக்கப்படாத 10வது கோளில் இருந்துதான் “இராட்சதர்கள்” பூமக்கு வந்திருக்க வேண்டும் என்பது விஞ்ஞானிகள் சிலரது ஐயம். இக் கோளில் தான் இராட்சதர்கள் வாழ்கிறார்கள் அல்லது இராட்சதர்களுக்கும் இந்தக் கோளிற்கும் மிகவும் தொடர்பு இருக்க வேண்டும் என்கிறார்கள்.

சுமேரியர்களது படத்தின் படி காணப்படும் 10வது கோள் ஒருவேளை சூரியனின் சோடி நட்சத்திரமாக இருக்குமாயின் அதனது கோள்களில் ஒன்றில் இருந்து இந்த இராட்சதர்கள் பூமிக்கு வந்திருக்கலாம் என எண்ணுகின்றார்கள். இந்த 10வது பிரமாண்டமான கோள் அல்லது சூரியனின் சோடி நட்சத்திரமானது சுமார் 300 மில்லியன் வருடங்களுக்கு ஒருதடவை சூரியனுக்கு அண்மையில் வருகிறது! மற்றைய காலங்களில் தொலைவில் எங்கேயோ சங்கரிக்கிறது! அதன்படி இன்று அந்தப் 10வது கோள் நமது சூரியனில் இருந்து எங்கோ தொலைவில் இருப்பதனால் இராட்சதர்களால் அவர்களது விண்கலங்களில் பூமியை வந்தடைய முடியவில்லை என்ககிறார்கள். ஒருவேளை 10வது கோள் சூரியனின் சோடி நட்சத்திரமாக இருந்து அழிந்திருப்பின் இராட்சதர்களும் அழிக்கப்பட்டு இருப்பார்கள்! அதனால்தான் இன்றைய காலங்களில் பூமியில் இராட்சதர்கள் தென்படுவதில்லை என்கிறார்கள்.

இனி சூரியனுக்கு 10வது கோள் ஒன்று சாத்தியமா எனக் கேட்டால் இல்லை என்றே கூறவேண்டும். ஏனெனில் இன்று விண்வெளியை பல தொலைக்காட்டிகள் நிமிடத்திற்கு நிமிடம் ஆய்வு செய்து கொண்டே இருக்கின்றன. மிகமிகத் தொலைவில் உள்ள கலக்சிகள், Black hloe கள் எல்லாம் இனம் கண்டு கொள்ளும் இந்த தொலைக்காட்டிகளினால் சூரியனுக்கு 10வது கோள் ஒன்று இருக்குமாயின் இலகுவில் கண்டு பிடிக்கப்பட்டிருக்கும். இதுவரை அப்படி ஒன்றைக் கண்டுபிடிக்காதபடியால் சுமேரியர் வரைந்த படத்தில் [illegible]க்கும் பத்தாவது கோள் சூரியனின் சோடி நட்சத்திரமாகத் தான் [illegible]ருக்க வேண்டும் என எண்ணத் தோன்றுகிறது. அல்லது 10வது கோள் ஒன்று மிகமிகத் தொலைவில் சூரியனை வலம் வருகிறது. விஞ்ஞானிகளால் கண்டுபிடிக்க முடியவில்லை எனக் கூறுவோமாயின் எதிர்காலத்தில் என்றோ ஒருநாள் அந்த 10வது கோள் நமது பூமிக்கு அண்மையில் வர மீண்டும் எமது பூமியில் இராட்சதர்கள் தென்படுவார்கள் என எதிர்ப்பார்க்கலாம்.

முதலாம் உலகமகா யுத்ததின் பிற்பகுதியில் ரஷ்யாவுக்கு சொந்தமான சைபீரியாவை அடுத்துள்ள பகுதியல் ஒரு இனம் தெரியாத விண்கலம் விழுந்தது என அதனை அடுத்து வசிப்பவர்கள் கூறுகின்றார்கள். மிகப் பெரிய சேத்தினை ஏற்படுத்திய அந்த நிகழ்வினை அன்று ரஷ்யா இல்லை எனக் கூறி மறுத்துவிட்டது. ஆனால் அப் பகுதியில் வாழ்ந்தவர்கள் அந்த நிகழ்வினை இன்றும் ஞாபகப்படுத்தும் பல தகவல்களை கூறிக் கொள்கின்றார்கள். இரும்புக் கோட்டை என வர்ணிக்கப்பட்ட சோவியத் யூனியனின் கட்டுப்பாட்டில் எதுவித தகலும் இது பற்றி வெளிவரவில்லை. காலம் செல்லச் செல்ல மெதுமெதுவாக இந்த விடயம் வெளிவரத் தொடங்கியது. அந்த இனம் தெரியாத விண்ககலம் ஏற்படுத்திய அனர்த்தம் ஹீரோசீமா, நாகசாகியில் ஏற்பட்ட அணுக்குண்டுத் தாக்கத்தை விடப் பெரியதாக இருந்திருக்கின்றது. அதைவிட மறுநாள் அப்பகுதியல் விண்வெளி உடை தரித்த மூன்று சுமாராக 10 அடி உயராமான மனிதர்கள் நடமாடினார்கள் என்றும், அவர்களைத் தேடும் முயற்சியில் பல ரஷ்ய இராணுவ வீரர்கள் ஈடுப்பட்டிருந்தார்கள் என்றும் அப்பகுதியை அடுத்து வாழ்ந்த சிலர் பத்திரிகைகளுக்குக் கூறியிருந்தார்கள்.

இந்த உயராமான மனிதர்கள் “இராட்சதர்கள்” ஆன ஏலியன்கள் (Alien) என்றும் இவர்கள் வந்த விண்கலம் விபத்துக்குள்ளாகி சைபீரியாவை அடுத்துள்ள பகுதியில் விழுந்திருக்க வேண்டும் என்றும் ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள். இந்த இராட்சத மனிதர்களை இராணுவ வீரர்கள் பிடித்தார்களா? அல்லது அவர்களுக்கு என்ன நடந்தது என்பது பற்றிய விபரங்கள் எதுவும் வெளிவரவில்லை. இவ்விவகாரம் பற்றி சில இரஷ்ய அதிகாரிகளைக் கேட்டபோது, சிலர் தமக்கு எதுவுமே தெரியாது எனக் கைவிரித்து விட்டனர். இன்னும் சிலர் வாய்மூடி மௌனிகளாக இருந்துவிட்டனர். சின்னாபின்னப்படுத்தப்பட்டு இருக்கும் அந்த காட்டுப் பகுதியை அடுத்து வாழ்பவர்கள் தங்கள் தந்தையர் காலத்தில் அது நிகழ்ந்தது என இன்னமும் அடித்துக் கூறிக்கொண்டு இருக்கின்றனர்.







## ஒரு சாதாரண மனிதனின் சிந்தனையில்....



### "அநாகரிகம்"

"மக்கள் சேவையே மகேசன் சேவை" என்று அரசியலில் ஈடுபாடு கொண்டு மக்களின் ஆதரவை பெற விரும்புபவர்கள் பொதுவாக சொல்லிக் கொள்வதுண்டு. இறைவனுக்கு சேவை செய்வது போல மக்களுக்காக சேவை செய்வதாக கருத்தில் கொண்டாலும் பொதுவாக சேவை என்ற சொல், எந்த பிரதி உபகாரங்களையும் எதிர் பார்க்காமல் மற்றவர்களின் நன்மையை மட்டுமே கருத்தில் கொண்டு சுயநல நோக்கமின்றி சேவை செய்ய முன் வருவதாகவே நாம் பொதுவாக எடுத்துக் கொள்கின்றோம். ஆனால் உண்மை அதுவல்ல சமூக சேவை, பொதுத் தொண்டு என்ற பெயர்களில் பணம் சேர்க்கும் ஆசையில் எதையுமே செய்ய தயங்காத மனம் கொண்டவர்களின் வெளிவேசமே என்பதை எல்லோருமே புரிந்து கொள்வதில்லை. மக்களின் நல்ல எதிர்காலத்திற்காக சேவை செய்ய முன் வருவதாக சொல்லிக் கொண்டு அரசியலில் இறங்குபவர்கள் உண்மையில் சொல்லிக் கொள்வது தமது மக்களின் (பிள்ளைகளின்) எதிர் காலத்திற்கு வேண்டிய சொத்து சேர்ப்பதற்காகவே என்றே நாம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

ஜனநாயம் என்பது மக்களால் மக்களுக்காக தெரிவு செய்யப்படுவதாக தான் எடுத்துக் கொள்ளப்படுகின்றது. அவ்வாறு எடுத்துக் கொள்ளப்படும் ஜனநாயகத்தில் துரதிஸ்டவசமாக, பொய்யர்களும், பித்தலாட்டக்காரர்களும், கயவர்களும், கள்வர்களுமே ஈடுபட்டு ஜனநாயத்தை புதை குழியில் தள்ளுவது என்பது உலகின் எல்லா பாகங்களிலும் பொதுவாக நடைபெற்று வரும் தவிர்க்க முடியாத நிகழ்வுகளாகும். மக்களுக்காக சேவை செய்ய முன்வந்த தலைவர்களில் கண்ணியமாக நடந்து பெரும்தலைவர்கள் என்ற பெயர் பெற்றவர்களை விரல்விட்டு எண்ணிவிடலாம். சாக்கடையில் எவ்வாறு கழிவுகள், தேவையற்றவைகள், சேர்கின்றனவோ அது போலவே அரசியல் என்ற சாக்கடையில் ஈனப் பிறவிகளான மனத் தன்மை கொண்டவர்கள், மனிதத்தன்மை அற்றவர்கள் மட்டுமே பெருமளவில் வந்து சுத்துமாத்து செய்கின்றனர். இவர்கள் மக்களை ஏமாற்றுவதும், மனித இனத்துக்கு அழிவைக் கொண்டு வருவது என்பதும் மனித இனத்துக்கு உண்டான சாபக் கேடாகும்.

அரசியலில் ,ஈடுபட்டு அரசாட்சியை பிடிப்பதற்கு உண்மையை சொல்லி உத்தமனாக இருப்பதைவிட, பொய் சொல்லி உண்மைக்குப் புறம்பான விடயங்களை உண்மை போல சொல்லும் திறன் கொண்டவர்களை மக்களும் நம்பிக் கொண்டு தமது எதிர் காலத்தை அவர்களின் கைகளில் கொடுத்து விடுகின்றார்கள். ஆட்சி கையில் இருக்கும் வரை என்ன எல்லாம் செய்வார்கள் என்று நன்றாக தெரிந்து உள்ளவர்கள் சிறுபான்மையாக இருப்பதனால் நடப்பதைக் கண்டு கொள்வதை தவிர வேறு ஒன்றும் அவர்களால் செய்ய முடிவதில்லை. பொதுவாக படித்தவர்ளும், அறிவாளிகளுமே அந்த சிறுபான்மையினரில் அடங்குகின்றனர்.

தமிழ் நாட்டு அரசியலில் கடந்த சில வாரங்களாக நடைபெற்று வரும் அரசியல் அநாகரிகங்களை பார்க்கும் போது தமிழன் என்று சொல்லிக் கொள்ளவே வெட்கப்பட வேண்டும். சமூகத்தில் மதிக்கப்படுபவர்கள், பெண்களும், முதியவர்களுமே, அந்தப் பெண்களும், முதியவர்களும் அரசியலில் ஈடுபட்டால் தாய்மை என்ற புனிதத்தை தம்மகத்தே கொண்டவர்களும், முதுமை என்ற அனுபவமும் கொண்டவர்களும் நல்ல அரசாட்சியை தருவார்கள் என்று எண்ணுபவர்கள் வெட்கித் தலை குனியும் அளவிற்கு தமிழ் நாட்டு அரசியல் தலைவர்களின் நடத்தைகள் இருப்பதை பார்த்து பலர் கவலைப்பட்டாலும், தமிழ் நாட்டு அரசியலில் இருப்பவர்கள் உண்மையிலே நடிப்புத் துறையில் இருந்து வந்தவர் என்பதனால் ஆச்சரியம் உண்டாகவில்லை.

அழியும் ஈழத்தமிழ் இனத்தையும் சாதி ஒழிப்பையும் தமக்கு சாதகமாக அரசியல் ஆதாயம் தேட மட்டுமே பாவித்துக் கொள்ளும் தமிழக அரசியல் கட்சிகளில் ஈடுபட்டுக் கொண்டு இருக்கும் பெண்களும் முதியவர்களும் படித்தவர்களும் பாமரர்களும் தமது எண்ணத்தில் கொண்டு இருப்பது சொத்து சேர்ப்பது மட்டுமே. விலை மாதர்கள் எவ்வாறு மானம், வெட்கம், தூக்கம் விட்டு தமது உடலை விற்றுப் பணம் சேர்க்கத் தலைப்படுகின்றனரோ, அவ்வாறே தமிழக அரசியல் வாதிகளும் ஆதரவாளர்களும் பணம், சொத்து சேர்த்துக் கொள்ளும் போட்டியில் கீழ்த்தரமாக நடந்து கொள்கிறார்கள். சாதியை அழிக்க என்ற உருவாகிய தமிழக அரசியல் கட்சிகள் இன்று சாதியையே அடிப்படையாக வைத்து அரசாட்சியை பிடித்து சொத்துச் சேர்ப்பதை பார்க்கும் போது விலை மாதர்கள் எவ்வளவோ மேல் என்றே மனதில்படுகின்றது. சொத்து சேர்க்கும் போட்டியில் அம்மாவும் அடித்துக் கொள்வதை பார்த்து நாம் பேசிக் கொள்வதே அநாகரிகம், விட்டு விடுவோம்.

*சிந்தனை தொடரும்....*
பரம் **G.**
ஒரு சாதாரண மனிதன்


**KAMLA**
NGU-YEN
Sales Representative



**416 - 491-4002**

RE/MAX Crossroads Realty Inc.

**THINKING OF SELLING ....**

**DETACHED 2 STOREY - $149,900:**

DETACHED TWO -STOREY HOME IN THE HEART OF SCARBOROUGH
NEW ROOF & LOTS OF UPGRADES WALK TO SUBWAY.
$7,500 DOWNPAYMENT - CARRIES LIKE RENT.

CALL - KAMLA TO VIEW

**DETACHED BACK SPLIT - TWO FAMILY DWELLING**

